வெளியீட்டு எண்:4
அக்டோபர் 30ஆம் தேதி 2005ஆம் ஆண்டு

FONDATION DE FRANCE

# அரசுசாரா நிறுவன தகவல் இதழ்

பி.பெ.வ.கூ. அரசுசாரா நிறுவன தகவல் மற்றும் ஆவண அலுவலகம்
No: 6, Chanda Sahib street, Pondicherry, 605 001. India.
Telephone: +91 413 520 0606 Fax: +91 413 520 0607
Email: infoinde@ader-france.org

தென்னிந்தியாவில் அதிகமான தொண்டு நிறுவனங்கள் இருப்பதால் அவைகளுக்கு உதவி செய்யும் பொருட்டு (ADER-ASSOCIATION POUR LE DEVELOPPEMENT ECONOMIQUE REGIONAL) அதாவது, பி.பொ.வ.கூ. (பிராந்திய பெருளாதார வளர்ச்சி கூட்டமைப்பு) என்ற ஒரு பிரஞ்சு தொண்டு நிறுவனமும் மற்றும் FDF- (LA FONDATION DE FRANCE) அதாவது, பி.த.ஸ். (பிரன்ச் தர்ம ஸ்தாபனம்) என்ற ஒரு பிரன்ச் தொண்டு நிறுவனமும் இணைந்து துவக்கிய அரசுசாரா நிறுவன தகவல் அலுவலகத்தை பி.பொ.வ.கூ. புதுவையில் நடத்திவருகிறது. இந்த அலுவலகம் சுனாமி சம்மந்தமான அனைத்து தகவல்களையும் பெற்று, தயார் செய்து தகவல் மடலாக மாதம் இரு முறை தமிழ், ஆங்கிலம் மற்றும் பிரன்ச் மொழிகளில் வெளியிடுகிறது.

## உள்ளடக்கம்

- தகவல் அலுவலகத்தின் தற்போதைய நிலவரம்
- செய்திகளின் தொகுப்பு
  - பேரழிவு மேலாண்மை
  - மீனவ செய்தி
  - ஊடகம்
  - புதுவை மற்றும் தமிழகத்தில் மழை
  - மறுகட்டுமானம்
  - சுகாதாரம்
  - சமூகம்
- புதிய ஆன்லைன் வளங்கள்
- நிகழ்வுகள் பட்டியல்

## தகவல் அலுலகத்தின் தற்போதைய நிலவரம்

15ஆம் தேதி முதல் 25ஆம் தேதி வரை பி.த.ஸ். லிருந்து வரும் பிரதிநிதி குழுவினர்களை தகவல் அலுவலகத்தின் ஊழியர்கள் வரவேற்று விருந்தோம்பல் செய்தனர். அக்குழுவினர், பி.த.ஸ். தால் நிதி உதவி பெற்று தமிழ்நாட்டின் கடலோரப் பகுதிகளில் சுனாமியால் பாதிக்கப்பட்டவர்களுக்காக செய்து கொண்டிருக்கும் 23க்கும் மேற்பட்ட புனரமைப்பு திட்டங்களை பார்வையிட்டனர்.

## செய்திகளின் தொகுப்பு

கடந்த மாதம் ஏற்பட்ட முக்கிய நிகழ்வுகள், தென்னிந்தியாவில் நடைபெறும் சுனாமி புனரமைப்பு திட்டங்களை பாதித்துள்ளது.

1) பாகிஸ்தான், ஆப்பகானிஸ்தான் மற்றும் தென்னிந்தியாவின் பல்வேறு பகுதிகளில் அக்டோபர் மதாம் 8ஆம் தேதி கடுமையான நிலநடுக்கம் ஏற்பட்டது. அதில் 80,000 த்திற்கும் மேற்பட்டோர் பலி. தகவல் அலுவலகம் பலருடன் தொடர்;பு கொண்டுள்ளது. அவர்கள் இந்தியா ஆளும் கா மீர் பகுதியில் புனரமைப்பு பணியில் ஈடுபட அயல்நாட்டு அரசுசாரா நிறுவனங்களின் கூட்டை எதிர்நோக்கும் உள்ளூர் அரசுசாரா நிறுவனங்களிடம் தொடர்பு வைத்திருக்கின்றனர்.

2) முன்கூட்டியே துவங்கிய தென்கிழக்கு பருவமழையால் மிக அசாதாரண சூழ்நிலை தமிழ்நாட்டில் ஏற்பட்டது. அக்டோபர் மாதம் மத்தியிலிருந்து இதுவரை 46பேர் உயிரிழந்துள்ளனர். 1.5 லட்சம் பேர் பாதுகாப்பான இடத்திற்கு மாற்றப்பட்னர். இதில் கடலூர், சென்னை, நாகபட்டினம் மற்றும் காவேரி ஆற்றுப்படுகை மாவட்டங்களும் அடங்கும். மழையால் பல்வேறு இடங்களின் மறுக்கட்டுமான வேலை நிறுத்தப்பட்டது. பல்வேறு தற்காலிக குடியிருப்பு மழைநீரால்

சூழப்பட்டது. ஆயினும் இந்த கடுமையான மழைப்பொழிவால் சுனாமியால் உப்பான விவசாய நிலங்களில் செய்யப்படும் மறுசீரமைப்பு திட்டங்கள் விரைவுப்படுத்தப்படும் என்று எதிர்பார்க்கப்டுகிறது.

## பேரிடர் மேலாண்மை

*பேரிடர் மேலாண்மை ஒத்திகை பயிற்சி*

தூத்துக்குடியில், தீ மற்றும் மீட்பு பணித்துறை பேரிடர் மேலாண்மை தொழில்நுனுக்க ஒத்திகை பயிற்சி நடத்தியது. இயற்கை சீற்றமான சுனாமி, நிலநடுக்கம் மற்றும் புயலின் போது எவ்வாறு நடந்து கொள்வது என்ற செயல்முறை விளக்கம் செய்து விழப்புணர்வை ஏற்படுத்தியது. திரு. ஜெயகாந்தன் மாவட்ட தீ அதிகாரி, தலைமையிலான குழு சுனாமி முன்னெச்சரிக்கை பெற்றவுடன் மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கையை செயல்முறை விளக்கம் செய்து காட்டினார்கள்.

ஆதாரம் : http://www.hindu.com/2005/10/14/stories/2005101405350300.htm

*பேரிடர் மேலாண்மைக்கு பிரத்யேகக் குழு அமைக்கப்டும்*

இந்தியா பேரழிவின் பொழுது ஏற்படும் சூழ்நிலையை கையாள பேரிடர் மேலாண்மைக்கு பிரத்யேக குழு அமைக்கப்பட்டு குறுகிய, நடுத்தர மற்றும் நீண்ட சூழ்நிலைக்கேற்ப நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்று மத்திய சுகாதாரம் மற்றும் குடும்ப நல அமைச்சர் திரு. அன்புமணி கூறினார்.

ஆதாரம் : http://www.hindu.com/2005/10/16/stories/2005101604640300.htm

## மீனவ செய்திகள்

### புதுவை

*சுனாமி நிவாரணத்தின் போது ஏற்ப்பட்ட மோதலில் மீனவர் ஒருவர் கொல்லப்பட்டார்.*

சுனாமி நிவாரணத்தின் போது ஏற்பட்ட மோதல் நல்லவாடு கிராமத்தைச் சேர்ந்த கிராம பஞ்சாயத்தில் கருவூலராக வேலை செய்தவர் கொலை செய்யப்பட்டார் மற்றும் 5 போர் காயம் அடைந்தனர். சுனாமிக்கு வந்த நிதியை கிராமத்தில் இருப்பவர்கள் பிரித்து கொள்ளலாம் என்று பஞ்சாயத்து கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டது. இதைத் தொடர்ந்து மோதல் ஏற்பட்டது. கிராமத்தில் வாழும் சிலர் ரூபாய் 9 லட்சம் வரை உதவி பெற்றனர். மேலும் அவர்கள் பணத்தை பங்கு போடும் முடிவையும் எதிர்த்தனர்.

ஆதாரம் : The Hindu print version 06-09-2005, New Indian Express print version, 06-10-2005

மீன்பிடி தொழிலாளர்களுக்கு நிவாரணம் வேண்டி கோரிக்கை

அகில இந்திய வர்த்தக ஒன்றியத்தின் மத்திய குழு (AICCTU) சுனாமி நிவாரண நடவடிக்கையின் ஒரு பகுதியாக மீன்பிடி தொழிலாளர்களுக்கு ந டஈடு தரவில்லை என்றால் அரசுக்கு எதிராக காலவரையற்ற உண்ணாவிரதம் இருக்கப் போவதாக அச்சுறுத்தி உள்ளது. (AICCTU)தலைவர் S.பாலசுப்பிர மணியம் பத்திரிக்கையாளர்களிடம் கூறுகையில், அரசு படகு உரிமையாளர்களுக்கு ரூபாய் 1.75 லட்சம் முதல் 4.5 லட்சம் வரை வழங்கியது ஆனால் அந்த படகுகளில் வேலை செய்த தொழிலாளர்களை புறக்கணித்தது.

சுனாமிக்கு பிறகு மின்பிடி தொழில் 170 நாட்களாக, பாதிக்கும் குறைவாக ஆனதால் மீனவர்களின் நிலை கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளது. சமீபத்தில் MVGECO வால் கடலில் ஆய்வுப்பணி மெற்க்கொள்ளப்பட்டதால் மீண்டும் ஒரு முறை மின்பிடி தொழிலாளர்கள் ஒரு மாதம் வேலையில்லாமல் இருந்தனர்.

ஆதாரம் : See New Indian Express on 14- 10-2005 (Pondicherry Edition)

## ஊடகம்

*10 மாதத்திற்கு பிறகு சிறுமி கண்டுபிடிப்பு*

A. அனுசியா, வடசென்னையைச் சேர்ந்த இவர் டிசம்பர் மாதம் 26ம் தேதி கடலோர தமிழகத்தை தாக்கிய சுனாமியின் போது காணாமல் போனார். கடந்த புதன் அன்று அச்சிறுமியின் எலும்பு கூடு இராயபுரம் மீன்பிடி துறைமுகத்தில் ஒரு படகுக்கு அடியில் இருந்து கண்டுபிடிக்கப்பட்டது.
ஆதாரம் : http://www.hindu.com/2005/10/13/stories/2005101308650400.htm

## புதுவை மற்றும் தமிழகத்தில் மழை

*சென்னை வாசிகள் மகிழ்ச்சி : நீர் தேக்கங்கள் நிரம்பின*

புண்டி நீர்த்தேக்கம், சென்னை மக்களின் மிகப் பெரிய குடிநீர்த்தேக்க ஏரி. இந்த நீர்த்தேக்க ஏரியில் எப்பொழுதும் நீரின் அளவு குறைவாகவோ, அல்லது வரண்டோயிருக்கும். ஆனால் இப்பொழுது நீர் நிரம்பி காணப்படுகிறது. ஆந்திரப் பிரதேசத்தில் உள்ள கண்டலேரு நீர் தேக்கத்தில் இருந்து வந்த நீரினால் புண்டி நீர்த்தேக்கம் 20 மெட்ரிக் அடியிலிருந்து 642.6 மெட்ரிக் அடியாக கடந்த 12 நாட்களில் உயர்ந்துள்ளது. முன்கூட்டியே துவங்கிய வடகிழக்கு பருவமழையுடன் இதற்கு உதவியாக இருந்தது. இதை இப்பொழுதே சொல்வது கடினம் என்றபோதிலும், அடுத்த கோடைக்காலம் வரை செனனைக்கு தட்டுப்பாடின்றி குடிநீர் வழங்கலாம், தற்போதைய நீர் வரத்து மகிழ்ச்சியை அளித்துள்ளது என்று நீர் மேலாளர் கூறினார்.

கடந்த ஆண்டு அக்டோபர் மாதம் 24ஆம் தேதி அன்று நகரத்தின் மொத்த நீர் தேக்கத் கொள்ளளவு 23.4 மெட்ரிக் அடியாக இருந்து. இந்த ஆண்டு அதே நாளில் 1.557 மெட்ரிக் அடியாக இருக்கிறது.
ஆதாரம் : http://www.hindu.com/2005/10/25/stories/2005102514670300.htm

*சென்னையில் கனமழை சுனாமியால் பாதித்த குடும்பங்கள் அவதி*

கடந்த வாரம், நகரத்தில் அடிப்படை வசதி இருந்த போதும் கன மழையில் நீரால் சூழப்பட்டது. அதனால் அடித்தட்டு மக்கள் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டனர். இதில் மிகவும் வருந்தத்தக்கது என்னவென்றால் நூற்றுக்கணக்கான குடும்பத்தினர் இன்னும் கடந்த ஆண்டு சுனாமியிலிருந்து குணம் அடைந்து கொண்டு இருக்கின்றார்கள். மற்றும் புணரமைப்பு முகாமில் தங்கள் வாழ்வாதாரத்தை மேன்படுத்த முயற்சி மேற்கொண்டுள்ளனர். தென் சென்னையில், கார்கில் வெற்றி நகர் வாசிகள் – சுனாமியால் பாதித்த தற்காலிக குடியிருப்பில் வசிப்பவர்கள் – தங்கள் வீடு மழை நீரால் முழ்கிய பின் எண்ணூர் நெடுஞ்சாலையில் சாலை மறியலில் ஈடுபட்டனர்.

சென்னையின் தென் பகுதியில் சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்கள் கண்ணகி நகரில் தற்காலிக குடியிருப்பில் வசிப்பவர்கள் மழைநீர் புகுந்ததால் மேடான பகுதிக்கு மாற்றப்பட்டனர்.
*ஆதாரம் :* http://www.hindu.com/2005/10/14/stories/2005101418050300.htm

*1.5 லட்சம் சென்னை வாசிகள் வெளியேற்றம்*

நகர் மற்றும் நகர்ப்புரத்தில் பல்வேறு இடங்களின் கனமழை பொழிந்து நீர் புகுந்ததால் வியாழக்கிழமை, அக்டோபர் 27ஆம் தேதி சென்னையைச் சேர்ந்த 150,000 பேர் வீடுகளை விட்டு வெளியேறினர். அவர்கள் தற்காலிகமாக பள்ளிகள், சமூதாயக்கூடங்கள் மற்றும் திருமண மண்டபங்களில் தங்கவைக்கப்பட்டனர். சென்னை மாநகராட்சி 25 நிவாரண மையங்களை அமைத்து உணவு, குடிநீர் மற்றும் மருத்துவ உதவிகள் பாதிக்கப்பட்டவர்களுக்கு வழங்கப்பட்டது.

ஆதாரம் : http://www.newindpress.com/NewsItems.asp?ID=IE920051027230705&Page=9&Title=Chennai&Topic=0&

*ஈரோடு மாவட்டத்தில் 20 நிவாரண முகம் துவக்கப்பட்டது.*

சுனாமியால் பாதித்தவர்களுக்கு வழங்கப்பட்ட உதவிகள் குறிப்பிட்ட அடிப்படையில் வேறுபடுத்தி பாதிக்கப்பட்டவர்களுக்கு நஷ்டஈடு வழங்கப்பட்டது. இதில் சேலைகள் மற்றும் வேட்டிகள் அடக்கம். முழுமையாக பாதித்த விட்டிற்கு ரூபாய் 2000மும் மற்றும் குறைவாக பாதித்த வீட்டிற்கு ரூபாய் 1000மும் பாதிக்கப்பட்டவர்களுக்கு வழங்கப்பட்டது.
ஆதாரம் : http://www.hindu.com/2005/10/27/stories/2005102702330300.htm

## மறுகட்டு மானம்

*மறுகட்டுமான வேலையில் இடைவெளி, சுனாமியால் பாதித்த கிரமத்தில் ஆய்வு*

சுனாமியால் பாதித்த மாவட்டங்களில் புனரமைப்பு பணி முழுவீச்சில் நடந்துகொண்டிருக்கிறது. ஆனால் தமிழ் நாடு வள மையத்தின் (TNTRC) சமீபத்திய ஆய்வில் ஐக்கிய நாட்டு வளர்ச்சி திட்டம் (UNDP), மாநில அரசு, பாதிக்கப்பட்ட மாவட்டங்களில் உள்ள தொண்டு நிறுவனங்கள் இணைந்து பல முக்கிய பிரச்சனைகளை வெளி கொண்டு வந்துள்ளனர். அதில் மறுகட்டுமான வேலையில் ஏற்படும் இடைவெளி போன்றவை அடங்கும் அந்த ஆய்வில் அரசு, அரசுசாரா நிறுவனங்கள் மற்றும் சில முகமைகள் மேற்கொண்ட ஆரம்பக்கட்ட நடவடிக்கைகளை பாராட்டி உள்ளனர்.

ஆனால் அந்த அறிக்கையில் சில குறைகளையும் சுட்டிக்காட்டியுள்ளனர். உதாரணமாக, நாகப்பட்டினம் மாவட்டத்தில் சம்மந்தன்பட்டி கிராமத்தில் கடைசியாக மேற்கொண்ட ஆய்வின்படி சுனாமியால் 150 பேர் உயிரிழந்தது மட்டுமின்றி பல படகுகள் சேதம் அடைந்தன. அப்போது அரசுசாரா நிறுவனங்களால் 200 படகுகள் வழங்கப்பட்டது. இது சுனாமிக்கு முந்தைய நிலையைக் காட்டிலும் இரு மடங்கு அதிகமாகும்.

மற்றும் ஓர் அதிர்ச்சித்தரக்கூடிய நிகழ்ச்சி என்னவென்றால் சுனாமியால் பாதித்த கிராமங்களில் தலித்துக்கள் நெருக்கடியான சூழ்நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர். மிகவும் குறைவாக 10 தலித்து குடும்பங்கள் மட்டுமே புனரமைப்பு மற்றும் நிவராண நடவடிக்கையில் பயன்பெற்றனர் என்று ஆய்வு கூறுகிறது.
ஆதாரம் : The Hindu print version 23-10-2004 : Pondicherry Edition

*மழையால் நிரந்தர குடியிருப்பு கட்டும் பணிபாதிப்பு*

நாகப்பட்டினம் மாவட்டத்தில் சுனாமியால் பாதித்த மக்களுக்காக கட்டப்படுகிற நிரந்தர குடியிருப்பு கடந்த வாரம் பெய்த கடுமையான மழையால் பாதித்தது. பல தொழிலாளர்கள் தங்கள் வேலைக்கு திரும்ப இயலவில்லை மற்றும் சில கட்டுமான பகுதிகள் மிகவும் ஈரமாக இருப்பதால் கடக்கால் பணியும் பாதித்தது.
ஆதாரம் : http://www.hindu.com/2005/10/26/stories/2005102608450500.htm

## சுகாதாரம்

*தற்காலிக குடியிருப்பில் தேங்கியிருக்கும் மழைநீரை வெளியேற்ற அதிகாரிகளுக்கு உத்தரவு*

மாவட்ட ஆட்சியர் திரு. து. இராதாகிரு ணன், மாவட்ட வருமான, பொதுப்பணித் துறை ஊழியர்கள் மற்றும் நகராட்சிகளுக்கு மாவட்டத்தில் பல்வேறு இடங்களில் தற்காலிக குடியிருப்பில் தேங்கியிருக்கும் மழைநீரை வெளியேற்ற அதிகரிகளுக்கு உத்தரவிட்டுள்ளனர்.

மாவட்ட ஆட்சியர் அதிகாரிகளுடன் நடத்திய நீண்ட கூட்டத்திற்குப் பிறகு, மாவட்டத்தில் தாழ்வான பகுதிகள் மற்றும் தற்காலிக குடியிருப்பிலும் கடுமையான பருவமழை காரணமாக நீர் தேங்குவதற்கு வாய்ப்புள்ளது. மேலும்

அப்பகுதியில் வசிப்பவர்களுக்கு தொற்று நோய்கள் பரவும் அபாயமும் இருக்கிறது எனவே மின் நீர் இறைப்பின் மூலம் தண்ணீரை வெளியேற்ற அதிகாரிகளுக்கு உத்திரவிடப்பட்டுள்ளது என்று கூறினார்.
ஆதாரம் : http://www.hindu.com/2005/10/25/stories/2005102505270300.htm

## சமூகம்

*சுனமி புனரமைப்பு போதிய அளவில் இல்லை : ஆய்வு*

தமிழ்நாடு மற்றும் புதுவை சுனாமி நிவாரணம் மற்றும் புனரமைப்பு ஒருங்கிணைப்பு தயார் செய்த அறிக்கையின்படி சுனாமிக்கு பிந்தைய புனரமைப்பு நடவடிக்கைகளின் குறிப்பாக வீடு கட்டுவதில் பெறும்பாலான மக்களை சென்று அடைவதில் தோல்வி அடைந்திருக்கிறது.

இந்த ஆய்வு, சுனாமி சட்ட செயல்பட்டுக் குழுவால் சுனாமியால் பாதித்த 434க்கும் மேற்பட்ட கிராமங்கள் மற்றும் சிறிய ஊர்களில் நடத்தப்பட்டது. அரசு 1,30,000 நிரந்தர வீடு கட்டப்படும் என்று உறுதியளித்தது ஆனால் இதுவரை 34000 நிரந்தர வீடுகட்ட மட்டுமே அரசு நிலம் கையகப்படுத்தி உள்ளது 182 கிராமங்களில் வீடுகட்ட நிலம் இன்னும் ஒதுக்கப்படவில்லை.

"சுனாமி தாக்குதல் மற்றும் பாதிப்பு" என்ற தலைப்பில் ஆய்வு ஒன்றை மக்கள் கண்காணிப்பு என்ற நிறுவனம் நடத்தியது. நிவாரணம் மற்றும் புனரமைப்பு நடவடிக்கையில் கடல் மீனவர் அல்லாத சமூகத்தினர் புறகணிக்கப்பட்டுள்ளனர். இது போன்று 346 சமூகத்தைச் சேர்ந்தவர்கள் முழுமையாக புறக்கணிக்கப்பட்டுள்ளனர்.
ஆதாரம் : http://www.hindu.com/2005/10/21/stories/2005102119000800.htm

"2005 : பேரழிவு ஆண்டு" என்ற தலைப்பில் ஆக்ஸ்போம் இன்டர்நே னல் அறிக்கை வெளியிட்டுள்ளது. அதன்படி இயற்கை சீற்றத்தால் பாதிக்கப்பட்ட மக்களின் எண்ணிக்கை கடந்த பத்தாண்டுகளைவிட அதிகமாக உள்ளது. பல லட்சக் கண்க்கானோர் கடந்த ஆண்டில் மட்டும் பாதிக்கப்ட்டிருக்கின்றார்கள் என்றும். மேலும் இந்த அறிக்கையில் அவசர நிலையில் எடுத்த நடவடிக்கை ஒரே சீராக இல்லை என்றும் மேலும் ஐக்கிய நாட்டுச்சபையால் வழங்கப்படும் அகில உலக மனிதாபிமான உதவிகள் காலத்தாமதம் மற்றும் சில நேரங்களில் போதிய அளவு இல்லை என்றும் கூறுகிறது. ஆக்ஸ்போம் தனது அறிக்கையில் கூறுவதாவது மனிதாபிமான உதவிகள் இன்னும் எல்லோரின் தேவைகளையும் பூர்த்தி செய்யவில்லை, தாமாதம் மனிதாபிமானத்தைக் காட்டிலும் பெறும்பாலும் ஊடகங்கள் அல்லது அரசியலே அதிகமாக இதை தீர்மானிக்கிறது. இந்த தோல்விகள் ஆயிரக்கணக்கான மக்களின் தேவையில்லாத பாதிப்பு மற்றும் மரணத்தை ஏற்படுத்துகிறது என்று முடிவில் கூறப்படுள்ளது.
ஆதாரம் : http://www.ipsnews.net/news.asp?idnews=30675

## புதிய ஆன்லைன் வளங்கள்

- தமிழ்நாடு அரசு, தனது சுனாமி இணையதளத்தில் அக்டோபர் மாதம் 17 ஆம் தேதி வரை சுனாமி புனரமைப்பு நடவடிக்கைகளை தொகுத்து வெளியிட்டுள்ளது.
  ஆதாரம் : http://www.tn.gov.in/tsunami/

- இந்திய அரசு தேசிய பேரிடர் மேலாண்மை இணையதளத்தில் புதிய தகவல்கள் இடம் பெற்றிருக்கிறது. முன்னேற்பாடு பாதுகாப்பு மற்றும் நிவாரணம் என்ற தலைப்பில் இவற்றை காணமுடியும்.
  ஆதாரம் : http://www.ndmindia.nic.in/Tsunami2004/Strategy%20Paper%20on%20Tsunami.pdf

- புதுவை அரசின் சுனாமி இணையதளத்தில் பல புதிய ஆவணங்கள் இடம் பெற்றிருந்தது இதை ப. பெ. வ. கூ. யின் தகவல் அலுவலகம் நகல் எடுத்து வைத்துள்ளது. அவைகள் பின்வருமாறு

  - சுனாமியால் பாதிக்கப்பட்டவர்களுக்கு ஒதுக்கப்பட்ட மனைகள்/வீடுகளின் வழிகாட்டல்
  - சட்டப்படியாக அமைக்கப்பட்ட தொழில் நுட்பக் குழு
  - சட்ட ரீதியாக அமைக்கப்பட்ட தொழில் நுட்பக் குழு அரசாணை எண் 101–ல் காணலாம்
  - அரசாணை எண் 112–ல் சுனாமியால் பாதிக்கப்பட்டவர்களுக்கு பணம் பட்டுவாடா செய்ய வேண்டிய முறை இடம் பெற்றிருக்கிறது
  - சுனாமியால் பதிக்கப்பட்ட குடும்பத்தினர்களுக்கு வீடு கட்டிக்கொடுக்கும் விண்ணப்பம்

- தமிழ்நாடு சுனாமி வள மையத்தின் இணையதளத்தில் பல புதிய தகவல்கள் இடம் பெற்றிகுக்கின்றன அதில் கன்னியாக்குமரி வளம் மற்றும் புனரமைப்பு மையத்தால் நடத்தப்பட்ட சுனாமி பாதிப்பின் மதிப்பீடு இடம் பெற்றிறுக்கிறது.
  ஆதாரம்: http://www.tntrc.org/downloads/Kanyakumari/IMPACT%20ASSESSMENT-Post%20tsunami%20intervention%20in%20Kanyakumari.DOC

- சுனாமி அவசர காலத்தின் போது தற்காலிக குடியிருப்பில் வசிப்பவர்கள் மாற்றம், என்ற தலைப்பில் இடம் பெற்றிருக்கின்றது. கடலூர் மாவட்டம், ஆகஸ்டு மாதம் 2005 ஆம் ஆண்டு என்ற இணையதளத்தில் இடம் பெற்றிருக்கின்றது.
  http://www.tntrc.org/downloads/Cuddalore/TsunamiContingencyPlanCud_draft%20(2).pdf

- கலிபோர்னியா பல்கலைக்கழகம், பிரிக்கினி ஹவாய். பல்கலைக்கழகத்தின் கிழக்கு– மேற்கு மையத்துடன் இணைந்து " சுனாமிக்கு பிறகு : பாதிக்கப்பட்ட மக்களின் மனித உரிமைகள்" என்ற தலைப்பில் ஆய்வு அறிக்கை தயாரித்துள்ளது. இந்த அறிக்கையின் வாயிலாக சுனாமியால் பாதிக்கப்பட்ட ஐந்து நாடுகளிலும் அரசு இயந்திரங்கள் துபிரயோக குற்றச்சாட்டுக்களுக்கு பதில் அளிக்க தவறியது மற்றும் அகில உலக மனிதாபிமான முகமைகள் அவ்வப்போது ஏற்படும் துபிரயோகங்களை புகார் செய்யத்தவறியது. இதன் முழு விவரம் பின்வரும் இணையத்தளத்தில் காணலாம்.
  http://www.eastwestcenter.org/stored/misc/AfterTsunami14FullReport.pdf


**மொழி பெயர்ப்பு**
திரு. ம. முருகானந்தம்
மின் அஞ்சல் : infoinde@ader-france.org

**இலக்கணம் மற்றும் பிழைதிருத்தம்**
திரு. மு. கணேஷ்

**ஆக்கம்:**
திரு. ச. சோழன்
தொலைபேசி : 91–413–2601294
மின்அஞ்சல் : sozhan6@sify.com




Ader

FONDATION DE FRANCE

## நிகழ்வுகளின் பட்டியல்

| நிகழ்வுகள் | அமைப்பாளர் | தேதி/ காலம் | இடம் |
|---|---|---|---|
| **Workshop**:<br>Post tsunami changes in the fisheries sector. | Organized by TRINet | 11-11-05 | Chennai,<br>Tamil Nadu |
| **Workshop:** "The Sphere Project - "Sphere in Humanitarian Practice" | RedR India<br><br>Contact : info@redrindia.org | 16-11-2005 | Trivandrum,<br><br>India |
| **Training:**<br>Capacity building program on "Livelihoods Promotion and Market Development" | MART<br>Contact R. Gopi Krishnan,<br>Tel: 044 - 553 15594<br>mart_chennai@yahoo.co.in | 17-11-05 to 19-11-05 | Chennai,<br>Tamil Nadu. |
| **Seminar:** International Conference on Disaster Management and Trauma Counselling | Sudha Bhogle at<br>bangaloreuniversity@counsellor.com | 21-12-05 to 22-12-05 | Bangalore,<br>Karnataka. |

## தொடர்பு கொள்ளவேண்டிய முகவரிகள் :

### புதுவை

| | |
|---|---|
| Laurent Tyers<br>Information Officer<br>Tel. +91 413 520 0606<br>Mobile : +91 98946 80458<br>Email : infoinde@ader-france.org | M. Muruganadam<br>Assistant Information Officer<br>Tel. +91 413 520 0606<br>Mobile : +91 98946 22240<br>Email : infoinde@ader-france.org |

### பிரான்சு

| | |
|---|---|
| **ADER** : Association pour le Développement Economique Régional<br>Gionata Simioni,<br>Programme Manager<br>31 Rue de Reuilly, 75012 Paris - France<br>Tel. +33 1 40 24 03 03<br>Fax: +33 1 40 24 09 77<br>Email: contact@ader-france.org | Fondation de France<br>Martin Spitz,<br>Programme Manager :<br>Email: martin.spitz@fdf.org<br>Estelle Hédouin,<br>Programme Information Manager:<br>Email: estelle.hedouin@fdf.org |